Clr.No.19

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

------

IN THE COURT OF

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | Case No. CC.320/2018 |
| Sessions | : | |
| Deposition of witness for | : | Prosecution<br>Defence Pw-1<br>Court |
| Name | .. | திரு. செல்வபாலாஜி |
| Father's Name | .. | திரு.கஜேந்திரன் |
| Village | | |
| Taluk | .. | Thiruvottiyur |
| Caste | .. | |
| Calling | .. | |
| Religion | .. | |
| Age | .. | 27 Date:13.05.2022 |

(Solmenly affirmed and oath taken under Act 10 of 1872)

மனுவின் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:-

நான் பிசிஏ எல்எல்பி படித்துள்ளேன். பிசிஏ எஸ் ஆர் எம் பல்கலைக்கழகத்தில் பயின்றேன். எல்எல்பி கல்லூரிக்கு சென்று பயின்றேன். அனந்த்பூர் உள்ள ஸ்ரீவிஜயநகர் கல்லூரியில் சட்டப்படிப்பு பயின்றேன். அந்த கல்லூரி ஸ்ரீகிருஷ்ணதேவராய பல்கலைக்கழகத்திற்கு உட்பட்டது. அங்கு விடுதியில் தங்கி பயின்றேன். அன்னபூர்ணா விடுதியில் தங்கி படித்தேன். அன்னபூர்ணா விடுதி என்பது லாட்ஜ் என்றும் தினசரி வாடகைக்கு விடப்படுவதும் என்றும் சொன்னால் சரிதான். என் மீது ஏற்கனவே ஒரு வழக்கு இருந்தது. அது தள்ளுபடி செய்யப்பட்டது தற்போது என்மீது 307 வழக்கு சாத்தாங்காடு காவல்நிலையத்தில் உள்ளது. செல்வகுமார் என்பவர் பெயரும் அந்த வழக்கில் உள்ளது என்றால் சரிதான்.

எனக்கு கிரிக்கெட் விளையாட தெரியும் ஆனால் விளையாட செல்லமாட்டேன். விளையாட்டு மைதானத்தில் என்ன பிரச்சினை நடந்தது என்பதை பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் ஞாயிற்றுகிழமை அன்று நடந்தது. கிரிக்கெட் விளையாட்டில் 2 அணிகளிலும் தலா 11 பேர் இருப்பார்கள் என்று சொன்னால் சரிதான். 15.07.2018 அன்று யாருக்கு இடையே சண்டை ஏற்பட்டது எனக்கு தெரியாது என்றால் மைதானத்தில் நடந்தது எனக்கு தெரியாது. மைதானத்தில் என் தம்பி மற்றும் எதிரிகளை தவிர மற்ற நபர்களும் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். மைதானத்தில் சுமார் 200 நபர்கள் விளையாடியிருப்பார்கள் என்றால் எனக்கு தெரியாது.

என் வீட்டில் இருந்து 215 எண் கொண்ட வீடு சுமார் 150 மீட்டர் தொலைவில் இருக்கும். 215 எண் கொண்ட வீடு என் வீட்டிலிருந்து 2 வளைவுகள் தாண்டியிருக்கும் என்றும் நேரடியாக என் வீட்டில் இருந்து பார்த்தால் தெரியாது என்றும் சொன்னால் சரிதான். 215 எண் கொண்ட வீட்டிற்கு சென்றால்தான் அங்குள்ள நபர்களை பார்க்கமுடியும் என்று சொன்னால் சரிதான். எதிரி 3 ரமேஷ் என்பவரின் வீடு ராஜசண்முகம் நகர் 4வது தெருவில் உள்ளது என்றால் சரிதான். 215 எண் கொண்ட வீடு அம்பேத்கார் நகரில் உள்ளது என்றால் அது சரியல்ல ராஜா சண்முகம் நகரில் உள்ளது. என் தம்பியை அடித்துவிட்டதாக என்னிடம் வந்து கூறினார்கள். நான் கேட்கசென்றேன். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரி 1 ராஜா அடித்ததாக கூறினார்கள். கிரிக்கெட் மட்டை தோராயமாக 1, 1 1/4 மீட்டர் நீளம் இருக்கும் என்றால் சரிதான். சண்டை நடப்பதாக யார் என்னிடம் வந்து சொன்னார்கள் என்றால் சின்ன பசங்க வந்து சொன்னார்கள். இந்த சங்கதியை என் முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான்.

சம்பவத்தின்போது நான் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். நான் 215 எண் கொண்ட வீட்டிற்கு சென்று கேட்பதற்கு முன்பு என் வீட்டு வாசலில் பிரச்சனை நடந்தது என்றால் சரிதான். அதுகுறித்து போலீசிடம் விசாரணையின்போது நான் கூறவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் விபத்துபதிவேடு பதிவு செய்தபோது நான் சுயநினைவில்தான் இருந்தேன் என்றால் சரிதான். மருத்துவர் விசாரித்தபோது அடையாளம் தெரியாத நபர்கள் என்னை அடித்தாக நான் கூறியுள்ளேன் என்றால் அது சரியல்ல. சம்பவத்தன்று இரவு 7.00 மணியளவில் நான் மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவர் கேட்ட கேள்விக்கு பதில்

அளிக்கும் நிலையில் தான் நான் இருந்தேன் என்றால் அது சரியல்ல.

என் தம்பி செல்வகுமார் விளையாட்டு மைதானத்தில் நடந்த சம்பவத்தின் தொடர்ச்சியாக என் வீட்டில் நடந்த தள்ளுமுள்ளில் நான் கீழே விழுந்தேன் என்றும் அதனால் எனக்கு காயம் ஏற்பட்டது என்றும் மற்றபடி நான் முதல் விசாரணையில் கூறியுள்ளது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. நான் காவல்நிலையத்திற்கு செல்லவில்லை மருத்துவமனையில் வைத்துதான் புகார் அளித்தேன். ஆஜா் எதிரிகள் மீது நடக்காத சம்பவத்திற்காக பொய்யாக புகார் அளித்தேன் என்றும் அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. சட்டப்படிப்பை சாதகமாக வைத்துக்கொண்டு என் தம்பி மற்றும் கூட்டாளிகளுடன் சேர்ந்து அங்கு இருப்பவர்களை மிரட்டி பணம் பறிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் ஆஜா் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல.